இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in · நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி · murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 183 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 01 – வெள்ளிக்கிழமை 13 பிப்ரவரி 2026 – சென்னை 20 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 183 : Thiruvalluvar Year - 2057 - Maasi 01 - Friday 13 February 2026 - Chennai 20 Pages ₹ 5.00

## தொழில்முனைவோர்தம் வளர்ச்சியே ‘திராவிடமாடல்’ ஆட்சியின் மகிழ்ச்சி!

## இணைந்தே பயணிப்போம்! வெல்வோம் ஒன்றாக!

# தமிழ்நாட்டை நோக்கி அதிக முதலீட்டாளர்களை அழைத்து வாரீர்!

### சென்னை – புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!



சென்னை, பிப்.13-

**சென்னையில் நடைபெற்ற, “புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில்” முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில், “தொழில்முனைவோர்தம் வளர்ச்சியே ‘திராவிடமாடல்’ ஆட்சியின் மகிழ்ச்சி” என்றும் “இணைந்தே பயணிப்போம்! வெல்வோம் ஒன்றாக!” என்றும் “தமிழ்நாட்டை நோக்கி அதிக முதலீட்டாளர்களை அழைத்து வாரீர்” என்றும் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.2.2026) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் (Conversion Conclave), ஆற்றிய உரை வருமாறு:-

திராவிட மாடல் என்றால், வளர்ச்சிக்கான மாடல்! திராவிட மாடல் என்றால் Result கொடுக்கக்கூடிய மாடல்! திராவிட மாடல் என்றால், மக்கள் நலனுக்காக இருக்கக்கூடிய மாடல்! இதை எல்லாம் உலகுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய மாநாடு தான், இந்த செயலாக்க மாநாடு!

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பொறுத்து சொல்ல வேண்டும் என்று சொன்னால், பொறுத்துக் கொள்ள முடியாத ஒரு சிலருக்கு எங்களுடைய செயலின் மூலம் பதில் சொல்லும் மாநாடு தான் இந்த செயலாக்க மாநாடு!

தொழில்துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொன்ன ஒவ்வொரு Dataவும், எங்களை விமர்சனம் செய்தவர்களுக்கான பதில் அதுதான்! இங்கே அவர் சொன்ன ஒவ்வொரு நம்பரும், எங்கள் Teamக்கான ஐந்து வருட கடுமையான உழைப்பிற்கான நம்பர். தொழில்துறையில் நாங்கள் செய்திருக்கக்கூடிய ரெக்கார்டை அடித்துச் சொல்கிறேன் அடுத்து, நாங்கள் வந்து தான் பீட் செய்யப் போகிறோம். இது உறுதி!

**இந்த மாநாடு – சாதனை சொல்கின்ற மாநாடு!**

இன்றைக்கு இந்த மாநாட்டில் மட்டும் 52 கம்பெனிகளுடைய திறப்பு விழா! 71கம்பெனிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா! 2 புதிய கம்பெனிகளின் புரிந்துணர்வு ஒப்பந்தம்! என சாதனை சொல்கின்ற மாநாடாக இது நடைபெறுகிறது.

கடந்த 2021 முதல் நாங்கள் செய்த பணிகளை எல்லாம் மேடை போட்டு சொல்லியிருக்கிறோம். இங்கே வந்திருக்கக்கூடிய ஊடக நண்பர்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்ள அன்போடு விரும்புவது,

தொடர்ச்சி 2ஆம் பக்கம்





தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்
ஆசிரியர் தேர்வு வாரியம்
மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட

9,801 வெற்றியாளர்களுக்கு

- பணி நியமன ஆணைகள் வழங்கும் விழா
- சென்னை அண்ணாநகரில் ரூ. 62.50 கோடியில் அகில இந்திய குடிமைப்பணி தேர்வுப் பயிற்சி மையம் - அடிக்கல் நாட்டு விழா
- அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி பணியாளர்கள் குடியிருப்பு கட்டடத் திறப்பு விழா



தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

நாள் : 13.2.2026 வெள்ளிக்கிழமை, நேரம் : காலை 10.00 மணி
இடம் : ஜவகர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம், சென்னை.

வெல்வோம் ஒன்றாக !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600 009

செ.ம.தொ.இ./180/வரைகலை/2026